www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

Ts11T

**தென்காசி மாவட்டம்**

**இரண்டாம் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2024**

26-11-2024

**வகுப்பு 11**

**பொதுத்தமிழ்**

நேரம் : 1.30 மணி　　　　　மதிப்பெண்கள்: 45

**பகுதி - I**

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். விடைகளை குறியீட்டுடன் எழுதுக.**　　　　**9×1=9**

1) 'ழ' என்னும் பெயரில் கவிஞர் ஆத்மாநாமால் வெளியிடப்பட்டது; 'கவிதை கிரீடம்' என்று போற்றப்படுவது

அ) சிற்றிதழ், குற்றால குறவஞ்சி　　ஆ) கவிதை நூல், திருச்சாழல்

இ) நாளிதழ், நன்னகர் வெண்பா　　ஈ) கட்டுரை நூல், குற்றாலக்கோவை

2) பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று

அ) சாழல்　　ஆ) சிற்றில்　　இ) சிறுதேர்　　ஈ) சிறுபறை

3) **கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை தேர்க:**

அ) விரியன் - 1. தண்டை

ஆ) திருமுருகு - 2. காலாழி

இ) நாங்கூழ்ப்புழு - 3. சிலம்பு

ஈ) குண்டலப்பூச்சி - 4. பாடகம்

4) 'ஜனப்பிரளயம்' என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?

அ) மக்கள் அவை　　ஆ) உயிர் அலை

இ) மக்கள் வெள்ளம்　　ஈ) மக்கள் அலை

5) ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.

அ) காவலாளி　　ஆ) மேலாளர்　　இ) உதவியாளர்　　ஈ) ஆசிரியர்

6) 'வாழ்வினில் செம்மை செய்பவள் நீயே' என்ற தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலை கொண்ட அரசு

அ) தமிழ்நாடு அரசு　　ஆ) புதுவை அரசு

இ) கேரள அரசு　　ஈ) கர்நாடக அரசு

7) 'அழகும் அறிவும் இளமையும் வாய்ந்தவன்' - யார் யாரிடம் கூறியது?

அ) அமைச்சர், கவிஞரிடம்　　ஆ) மன்னர், அமைச்சரிடம்

இ) அமைச்சர், மன்னரிடம்　　ஈ) மன்னர், அமுதவல்லியிடம்

8) ஈறுபோதல், முன்னின்ற மெய் திரிதல், தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுதல் ஆகிய வரிசையில் புணர்ந்த சொல்

அ) மூதூர்　　ஆ) வெற்றிடம்

இ) நல்லாடை　　ஈ) பைந்தளிர்

9) எட்டுத்தொகை நூல்களில் புறத்திணை சார்ந்த நூல் எது?

அ) நற்றிணை　　ஆ) ஐங்குறுநூறு

இ) பதிற்றுப்பத்து　　ஈ) குறுந்தொகை

**பகுதி - II**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக:**　　　　**5×2=10**

10) இந்திய கட்டடக்கலையின் மூன்று வகைகள் யாவை?

11) உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தவை எவை?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



12) **தொடர் அமைத்து எழுதுக:** அன்றொரு நாள், நிழலிலிருந்து

13) கலைச்சொல்லாக்கம் - பொருள் தருக.

14) **கலைச்சொல் தருக:**

அ) Equality ஆ) Epigraph

15) அலைகடல், புதுக்கியவர் - இலக்கணக்குறிப்பு தருக.

16) **விடுபட்ட இடத்தில் அடுத்து வரவேண்டிய சொற்களைக் கண்டறிந்து எழுதுக:**

அ) எழுத்து ............ சீர், தளை ............ தொடை.

ஆ) கார்காலம் ............ குளிர்காலம் - ஐப்பசி, கார்த்திகை ............ - மார்கழி, தை.

## பகுதி - III

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக:** 4×4=16

17) ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?

18) ஃபிரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?

19) சேரநாடு செல்வவளம் மிக்கது என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.

20) ஆக்கப்பெயர் விகுதிகள் தற்கால வாழ்வியலில் மிகுந்துள்ளன - ஏன்?

21) உணவும் உறக்கமும் அணில் கனவாம்; உங்கள் கனவை உங்கள் சொற்களில் விளக்குக.

22) உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள் - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

சிவக்குமார்.பெ,
பிரைம் மெட்ரிக் மே.நி.ப,
கல்லம் - 621809.

## பகுதி - IV

**ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடை தருக:** 1×6=6

23) பாரதிதாசன் ஒரு ''புரட்சிக்கவி'' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

**(அல்லது)**

தென்காசிமாவட்டம்.

சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும்பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

## பகுதி - V

**குறிப்பு: அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 1×4=4

24) 'சிற்றூரும்' ........... எனத் தொடங்கும் புரட்சிக்கவி பாடலை எழுதுக.

----------

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com